**செ.வெ.எண்:5** **நாள்:03.09.2020**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

**<u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் - நாமக்கல்.</u>**

2018 – 2019-ம் ஆண்டு தேசிய அளவிலான போட்டிகளில் (ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை) கலந்து கொண்டு தங்கம் வென்றவர்களுக்கு ரூ.6000-ம் வெள்ளி வென்றவர்களுக்கு ரூ.4000-ம் மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.2000-ம் விளையாட்டு உபகரணங்களை வாங்கிட தொகை வழங்கப்பட உள்ளது. **இதில் இந்திய பள்ளி விளையாட்டுக்கள் கூட்டமைப்பு** (SGFI) **நடத்தும் போட்டிகளுக்கு வழங்கப்பட மாட்டாது**.

எனவே 2018 – 2019-ம் ஆண்டு தேசிய அளவிலான போட்டிகளில் (ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை) கலந்து கொண்டு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கணைகள் பெயர், முழு முகவரி, மற்றும் வங்கி புத்தக முதல் பக்க நகல் , சான்றிதழ்களின் நகலுடன் 07.09.2020-க்குள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை நேரில் அனுகி அசல் சான்றிதழ் மற்றும் சான்றிதழ் நகல் இரண்டு நகல்கள், வங்கி புத்தகம் முதல் பக்கம் இரண்டு நகல்களை கொடுத்து தங்கள் பெயரினை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு நாமக்கல் **மாவட்ட ஆட்சித் தலைவர்,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இச்செய்தியை தங்கள் செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்களில் வெளியிட்டு வீரர் / வீராங்கனைகள் பயனடைய ஆவண செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஒம்/-கா.மெகராஜ் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**